## விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2015

---

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட 1996 ஆம் இலக்க விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 01

வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் அண்டிற்காக மாணவர்களைப் பதிவுசெய்யும் போது பாடநெறிகளுக்குரிய பாடநெறிக் கட்டணங்கள் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையால் ரூபா 1,795,650 ஆல் மீளாய்வாண்டின் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 02

மீளாய்வாண்டின் போது பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 337,750 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிராமையாலும் மீளாய்வாண்டின் வெளிவாரி கட்டண ஒதுக்கீடு ரூபா 5,111,375 ஆக இருந்த போதிலும், அது ரூபா 2,020,320 என காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுப் பாய்ச்சல் அல்லாத கொடுக்கல் வாங்கல்களின் கீழ் சீராக்கப்பட்டமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் சமப்படுத்தல் தொடர்பில் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 03

முன்னைய ஆண்டின் போது நடாத்தப்பட்ட குறுங்கால பாடநெறி மற்றும் செயலமர்வுகளுக்குரிய உணவு வழங்கலுக்காகவும் புலமைப் பரிசில் வழங்கலுக்காகவும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 903,030 மற்றும்

ஆசிய அனர்த்த தயார்படுத்தல் நிறுவனம் (Asian Disaster Prepareness Centre) செயற்திட்டத்திற்குரிய 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக கல்விசார் பதவியணியின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 855,470 கூட்டிணைந்த படிகள் செலவினம் பின்னோக்கி சீராக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணங்கள் மற்றும் கட்டிட வாடகை ரூபா 179,893 மற்றும் வெளிநாட்டு வழங்கலுக்காக பல்கலைக்கழகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 72,999 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 29,430,750 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2013 ஆம் ஆண்டின் போது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தை (Master of Science in Disaster Management) பின்பற்றிய 14 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில் பணம். | 875,000 | புலமைப் பரிசில் பணத்தை பெற்றுக் கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் |
| (ஆ) | ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட இரசாயன பொருட்களும் ஆராய்ச்சி உபகரணங்களும் | 10,453,888 | இருப்பு புத்தகங்கள் |
| (இ) | 2010-2015 காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் | 18,101,862 | உரிய துறையின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்துவதற்கான நடைமுறைகள் |
| | | 29,430,750 | |

**2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மாணவர்களுக்கு மீளச் செலுத்த வேண்டிய நூலக மற்றும் ஆய்வுகூட வைப்புக்கள் ரூபா 2,448,050 தொகையை தீர்வு செய்வதற்கு அல்லது வருமானமாக நிறுவகத்தின் நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய 06 கல்விச் சபைகளுக்காக (Board of Studies) செலுத்த வேண்டிய ரூபா 755,122 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1996 இன் 01 ஆம் இலக்க விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டி | |
| (i) 10(6) ஆம் பிரிவு | முகாமைத்துச் சபை அங்கத்தவர்களுக்கு படிகளைச் செலுத்துவதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமொன்றில்லாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 204,100 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 11.2 (ஏ) மற்றும் (ஐ) பிரிவுகள் | நிறுவகத்தின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக துணை விதி வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 மார்ச் 15 ஆந் திகதி வரை அந்த துணை விதி வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 17(2) ஆம் பிரிவு | நிறுவகத்திற்கு கிடைக்கும் அனைத்து பணத்தையும் நிறுவகத்தின் நிதியத்திற்கு செலவு வைப்பது தொடர்பான மாதாந்த அறிக்கை அடுத்த மாதம் முடிவடைவதற்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் IV ஆம் அத்தியாயத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 2011 ஏப்ரல் 28 ஆந் திகதிய 955 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு மற்றும் பணிக்கொடை கணிப்பீட்டிற்கு கற்கைப் படிகள் கருத்திற் கொள்ளக்கூடாத போதிலும், கற்கைப் படிகளை உள்ளடக்கி கணிப்பிட்டதன் காரணமாக மேற்படி நிதியத்திற்காக நிறுவனத்தின் கல்விசார் பதவியணியினருக்காக ரூபா 365,924 பங்களிப்புப் பணம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இன் (ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகள் | தமது கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய சேவைகளிலிருந்து உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 8,688,860 ஆன வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 868,886 தொகையும் ரூபா 1,704,740 ஆன கூட்டிணைப்புக் கட்டணங்களிலிருந்து ரூபா 170,474 ஆன கட்டணங்களும் செலுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் கழித்து பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2014 மார்ச் 26 ஆந் திகதிய 06/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் சுற்றறிக்கை கடிதம் | உபசரிப்பு படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தில்லாத நிறுவகத்தின் இரண்டு சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு 2014 யூலை முதல் 2015 திசெம்பர் வரை உபசரிப்பு படிகளாக மொத்தம் ரூபா 146,706 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆராய்ச்சி படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய உத்தியோகத்தர்களால் ஆராய்ச்சி முன்மொழிவின் செயல்முன்னேற்ற அறிக்கை ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்படாதிருக்கையில் மீளாய்வாண்டில் 04 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 902,497 ஆன ஆராய்ச்சிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆளுகை சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 09 வெவ்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்றிருந்த நிதி ஏற்பாடு வரையறையை விஞ்சி ரூபா 2,172,246 ஆன ஆராய்ச்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2015 சனவரி 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு மணித்தியாலமொன்றிற்காக செலுத்தப்படுகின்ற ஆகக்குறைந்தது ரூபா 1,000 இற்கு உட்பட்டு பல்கலைக்கழக நிர்வாக சபையால் தீர்மானிக்கப்படுகின்ற அளவின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டில் ஒரு மணித்தியாலத்திற்காக ரூபா 1,500 முதல் ரூபா 3,500 வரையான பெறுமதியான வீச்சில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 26,173,802 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,181,712 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 10,992,090 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் செலாவணி இலாபம் ரூபா 8,436,092 ஆல் அதிகரித்தமை மற்றும் அரசின் மீண்டெழும் மானியங்கள் ரூபா 2,000,000 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 41,238,652 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு வருடாந்தம் தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 81,852,722 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1996 இன் 01 இலக்க விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் அடிப்படை நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- பட்டப்பின் கல்வியினை வழங்கும் சிறந்த நிறுவனமொன்றாக்குதல்.
- அடிப்படை மற்றும் கூட்டிணைந்த விஞ்ஞானம் சார் ஆராய்ச்சிகளுக்கான சிறந்த நிறுவனமொன்றினை உருவாக்குதல்.
- சமூகத்திற்கு விஞ்ஞானம் சார்ந்த தகவல்களை விரிவுபடுத்தல்.
- உயர் நிதி மற்றும் நிர்வாகம் என்பவற்றை செயற்திறனாக இயக்கி சிறந்த பட்டப்பின் படிப்பு நிறுவனமொன்றாக மாறுதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை விஞ்ஞான பட்டப்பின் படிப்பிற்காக நிறுவகத்தில் பதிவுசெய்த மாணவர்களில் 2016 மார்ச் 15 ஆந் திகதி வரை பட்டப்பின் படிப்பு பட்டத்தை பூர்த்திசெய்யாதிருந்த மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டிலும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 53 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையாக இருந்தது.

(ஆ) கலாநிதி மற்றும் தத்துவமானி பட்டங்களுக்கான மாணவர்களின் பதிவு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின் போதும் 2015 ஆம் ஆண்டின் போதும் முறையே 16 சதவீதம் மற்றும் 33 சதவீதம் என குறைவடைந்திருந்ததுடன் அது தொடர்பாக காரணங்களை இனங்கண்டு நிறுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதியத்தின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் முழுமையாக சுயமான உழைப்பின் அடிப்படையில் இருக்கும் நிலை வரை மேம்படுத்த வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்திடம் ரூபா 303,164,460 ஆன நிலையான வைப்புக்கள் மற்றும் பண மீதியொன்றும் காணப்பட்ட போதிலும், திறைசேரியிடமிருந்து மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 22,000,000 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 06 ஆராய்ச்சிகளுக்குரிய ரூபா 1,761,912 கூட்டுத்தொகையான பணம் 02 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் வரையான காலமொன்று ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படாமல் ஆராய்ச்சி நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் பதவியணியின் 11 பதவிகளின் 14 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், நிரந்தர பேராசிரியர்கள் மற்றும் 04 வெளிவாரி பேராசிரியர்கள், ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் கல்விசார் பதவியணியினரில் 10 பேரின் வெற்றிடங்கள் இருந்தமையால் நிறுவகத்தின் கல்வி மற்றும் நிறுவக நடவடிக்கைகளை சிறந்த வகையில் நிறைவேற்றப்படுவதற்கு அது தடையொன்றாக இருந்தது.

## 4.4 சந்தைப் பங்கு

மாணவர் கல்விக்காக நிறுவகத்தை ஏற்றுக்கொள்ளல், நிறுவகத்திலிருந்து உருவாகும் பட்டதாரிகளுக்கான கேள்வி, ஒரு மாணவருக்கு நிறுவகத்தின் ஊழியர் எண்ணிக்கை விகிதம், நிறுவகத்திற்குரிய ஆராய்ச்சிகளுக்கான ஈடுபாடு, சர்வதேச பீடங்கள் மற்றும் சர்வதேச மாணவர் விகிதம் போன்ற நியதிகள் அடிப்படையாகக் கொண்டு Quacquarelli Sysmonds நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்ட சர்வதேச பல்கலைக்கழக தரப்படுத்தலின் பிரகாரம் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2014/2015 ஆம் ஆண்டில் 15352 ஆவது இடத்தில் காணப்பட்ட போதிலும், 2015/2016 ஆம் ஆண்டின் போது 16,152 வரை 800 இடங்கள் பின்னடைந்து காணப்பட்டன. இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையே 2014/2015 ஆம் ஆண்டில் 25 ஆவது இடம் கிடைத்திருந்த போதிலும், 2015/2016 ஆம் ஆண்டின் போது அது 26 ஆவது இடம் வரை ஒரு இடத்தினால் பின்னடைந்து காணப்பட்டது. அதாவது தமது தரப்படுத்தல் நிலையை பேணிச் செல்வதற்கு நிறுவகம் தவறியிருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் தங்களது நிறுவகத்திற்காக அடிப்படை அறிக்கை, காலாண்டு அறிக்கை மற்றும் உரிய ஆண்டின் பொழிப்பறிக்கை என்பவற்றை இலக்கிடப்பட்ட திகதிகளில் முகாமைத்துவ கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 7.4.1 பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவினால் தமது அவதானிப்புக்கள், பரிந்துரைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கணக்காய்வுக் குழுவினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த வருடாந்த கணக்காய்வுத் திட்டம், உள்ளக நிர்வாக முறைமை மீளாய்வு மற்றும் குழு அறிக்கைகள் சமர்ப்பித்தல் போன்ற நிறைவேற்றப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானங்களையும் உள்ளபடியான செலவினங்களையும் ஒப்பீடு செய்தபோது 30 செலவின விடயங்களில் 28 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாமை. |
| (ஆ) | நிதியக் கட்டுப்பாடு | காசேட்டின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதியினை முதலீடு செய்யப்படல். |
| (இ) | ஆராய்ச்சிகள் மற்றும் மானியங்கள் | ஆராய்ச்சி உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | இருப்பு மற்றும் பொருளிருப்புக் கட்டுப்பாடு | பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை. |
| (உ) | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமை |